# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## AS.No.62/2000

DW3–சையதுகமால் நாள்.24.11.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்தவழக்கில் 3ம் பிரதிவாதி என்அப்பா ஆவார். அவர் இறந்துவிட்டார். சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு நிலுவையில் இருந்தபோது நான் வாரிசாக சேர்க்கப்பட்டேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.14ல் குறிப்பிடப்பட்டுள்ள நிர்வாக கமிட்டியின் செயலாளராக குறிப்பிடப்பட்டுள்ள சையது காசிம் என்அப்பா ஆவார். அவர் 1991ல் இருந்தார். 1986ம் ஆண்டு வக்பு போர்டு நிர்வாகத்தை எடுத்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அப்போது நான் சின்னபையன் எனக்கு விவரம் தெரியாது. எனக்கு தற்போது 62 வயதாகிறது. 1986ம் ஆண்டு எனக்கு 23 வயது என்றால் சரிதான். என்அப்பா இறப்பிற்கு பின்னர் என்னை வாரிசாக சேர்க்கும்போது என்னை சேர்க்க கூடாது என்று நான் உயர்நீதிமன்றத்தில் ஆட்சேபணை செய்யவில்லை. அப்போது நான் வெளிநாட்டில் இருந்தேன். நான் சவுதியிலும், துபாயிலும் மொத்தம் சுமார் 26 வருடங்கள் இருந்தேன். கடைசியாக இந்தியாவுக்கு 2019ல் வந்தேன். சென்னையில் இந்த வழக்கில் வழக்கறிஞர் மூலம் நான் ஆஜராகவில்லை. தாவா சொத்து சர்வே எண்.315/2 மற்றும் 315/3 என்றால் சரிதான். என்னிடம் தாவா சொத்திற்கு காட்டப்படும் பட்டா வாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். எப்படி கொடுத்தார்கள் என்றால் தெரியாது. வக்புபோர்டு தரப்பில் வாதிபெயருக்கு கொடுக்கப்பட்ட பட்டா தவறு என்று நடவடிக்கை எடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. அவ்வாறு தவறு என்று நான் நடவடிக்கை எடுக்கவில்லை. என்அப்பா எடுத்தாரா என்று எனக்கு தெரியாது. இந்தவழக்கில் என்தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியவில்லை. என்அப்பா தனிப்பட்ட முறையில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. 2ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையை நான் ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 30ம் பிரதிவாதி பாதுஷா என்ஊர்காரர். நான்

எனக்காகவும், அவருக்காகவும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேன். அவருக்காக சாட்சியம் அளிப்பதற்கு அவர் எனக்கு அதிகார ஆவணம் எதுவும் எழுதிதரவில்லை. எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் நான் சாட்சியம் அளிக்க எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு 1985 முதல் நடக்கிறது. என்தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது என்றவிவரம் எனக்கு தெரியாது. வாதிதரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றவிவரம் எனக்கு தெரியாது. என்அப்பாவும் மற்றவர்களும் 1986ம் ஆண்டு வக்புபோர்டு நிர்வாகஸ்தர்களாக வந்தாலும், அதற்கு முன்பே வாதியின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்ததால் வாதி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பற்றிய விவரம் எதுவும் தெரியாதுஎன்றும், என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.